"சிறைச்சாலை நமக்குப் புதிதல்ல!"

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆடி மீ 20உ புதன் (4—8—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆடி மீ 21உ வியாழன் (5—8—54) | இதழ்: 44

"தென்னவர் மொழியினைக் கற்குமாறு வடவர்க்குக் கூறுவேன்"

மதுரையில் அமிருத கௌரி பேச்சு

பிரிவினை எண்ணத்தைக் கைவிட வேண்டுகிறார்!

"எப்பகுதி மக்கள் மீதும் ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று துப்பாக்கிமுனையின் உள்ளே கட்டாயமாகத் திணிக்க முடியாது. சென்னை போன்ற மிகப் பெரிய இராஜ்யத்து மக்கள் தேசிய மொழியைக் கற்றுக்கொள்வார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. அனைவரும் ஒரே தேசிய மக்கள் என்ற உணர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால், வடக்கே உள்ள மக்களும் ஒரு தென் இந்திய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதை நான் எடுத்துச் சொல்கிறேன்,"

—என்று, இந்திய சுகாதார அமைச்சர் திருமதி அமிர்தகௌரி மதுரை மருத்துவக் கல்லூரியைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:- "தென்னாட்டு மக்கள் அனைவரும் இந்தி மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள், மாகாண நோக்கையும், பிரிவினை மனப்பான்மையையும் கைவிட்டுவிட வேண்டும். அவர்களெல்லாம் இந்தியரென மட்டுமே மனதில் கொள்ள வேண்டும். அவர்கள் இந்தியாவின் எப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றிக் கவலையில்லை.

"இந்தி மொழி நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்களால் பேசப்படுவதால் அது தேசிய மொழியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது."

நெய்வேலி நிலக்கரி சுரங்கம்

சென்னைக்கு உரிமையில்லை?

தேஷ்முக் கூற்று

தஞ்சை—

"நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தை ஒட்டிய செலவில் சென்னை ராஜ்யமும் ஒரு பகுதியை ஏற்க நேருமா?" என்று கேட்டதற்கு, "ஏற்கனவே அதிகம் தேவைகளைப் பூர்த்தி செய்யும்படியான நிலையிலுள்ள சென்னை ராஜ்யம், மேற்படி திட்டத்தைப் பொறுத்து செலவில் பங்கேற்குமென எதிர்பார்ப்பதற்கில்லை," என்று இந்திய நிதி அமைச்சர் தேஷ்முக் நிருபர்களிடம் கூறினார்.

சென்னை ராஜ்யம் புதிய திட்டங்களுக்கு தாராளமாகப் பணம் கொடுத்திருப்பதாக அவர் மேலும் கூறினார்.

குவாடிமாலாவில் மீண்டும் கொந்தளிப்பு

காஸ்டிலோவை எதிர்த்து கலகம்

குவாடிமாலா, ஆக. 3—

குவாடிமாலாவில் மீண்டும் கலகம் ஏற்பட்டுள்ளது.

இராணுவப் பயிற்சி பள்ளியைச் சேர்ந்த 20 அதிகாரிகளும், பயிற்சியாளரும் கலகம் செய்ய ஆரம்பித்ததாகவும், அதை காஸ்டில்லோ சர்க்கார் அடக்கிவிட்டதாகவும் தெரிகிறது.

ஆனால் மீண்டும் கலகம் வலுவடைந்து சண்டை மிகவும் கடுமையாக நடைபெறுவதாகவும் தெரிகிறது. இக்கலகத்தில் முன்னுள் சர்க்காரின் கம்யூனிஸ்டு ஆதரவாளர்கள் சேர்ந்திருக்கக் கூடுமென்று நம்பப்படுகிறது.

கர்னல் காஸ்டிலோவை எதிர்த்துக் கலகம் தீவிரமாக நடைபெறுகிறது. காஸ்டில்லோவின் அருப்புகளிடம் போர்க்கருவிகள் குறைவென்றும், அவர்களில் பலர் மாண்டு போயினர் என்றும் தெரிகிறது.

இராணுவத்தின் ஒரு பகுதியினர் காஸ்டிலோவிடம் விசுவாசமாக இருக்கின்றனர் என்றும் கலகத் தருப்புகளிடம் சிறந்த போர்க் கருவிகள் இருக்கின்றனவாம்.

கலகம் நிற்காவிட்டால் வெளியிலிருந்து விமானங்கள் வந்து தாக்குதல் நடத்தும் என்று காஸ்டிலோ சர்க்கார் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

கொழும்பு அரசுகள் 2-வது மாநாடு: செப்டம்பரில் நடைபெறும்

இலங்கைப் பிரதமர் கொத்தலாவல முயற்சி

கொழும்பு, ஆக. 3—

அமெரிக்க ஆதிபத்திய எண்ணம் காரணமாகத் தோற்றுவிக்கப்படும், தென் கிழக்கு ஆசிய நாடுகள் பாதுகாப்பு நிறுவனத்தில், தென் கிழக்கு ஆசிய நாடுகள் கலந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி விவாதிக்க செப்டம்பரில் கூடும் மாநாடு ஒன்றில் கலந்து கொள்ள வருமாறு பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி அந்தோனி ஈடன் அனுப்பிய அழைப்பை இந்தியப் பிரதமர் நேரு நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

மேற்கத்தியரின் ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு நேரு ஒரு மாற்றுத் திட்டம் வைத்திருப்பதாக இலங்கைப் பிரதமர் கொத்தலாவல இலங்கை மக்கள் சபையில் தெரிவித்தார்.

அதுபற்றி நேருவிடமிருந்து தனக்குச் செய்திகள் வந்திருப்பதாகவும், ஆனால் என்ன திட்டம் என்ற விபரங்கள் தெரியாதென்றும், ரங்கூனிலோ அல்லது கொழும்பிலோ செப்டம்பருக்கு முன் நடத்த எண்ணியிருக்கும் கொழும்பு மாநாட்டில் அதைப்பற்றி விவாதிக்கலாம் என்று கொத்தலாவல தெரிவித்தார்.

மேற்கத்தியரின் திட்டத்தை இந்தோனேஷியாவும் இந்தியாவைப் போலவே மறுத்துவிட்டதாகவும், பாகிஸ்தான் மட்டும் அது பற்றிப் பேச விருப்பம் தெரிவித்திருக்கிறதென்றும், பர்மா தன் கருத்தை இன்னும் தெரிவிக்கவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

கொழும்பு அரசுகளின் மாநாட்டிற்கு முன்னதாக அத்திட்டம் பற்றி தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இலங்கை விரும்பவில்லை என்று கொத்தலாவல கூறினார்.

இந்தியா நிராகரித்த மேற்கத்திய திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கவே இந்த இரண்டாவது மாநாட்டை இலங்கைப் பிரதமர் கூட்ட முயற்சிப்பதாக இலங்கை மக்கள் சபையில் சில உறுப்பினர்கள் கண்டித்துப் பேசினார்கள்.

உலகின் 2-வது உயர்ந்த மலையுச்சி

இத்தாலியர் எட்டிப் பிடித்து வெற்றியடைந்தனர்

லாகூர், ஆக. 3—

உலகத்தின் மிக உயரமான மலைகளில் இரண்டாவதான 28,250 அடி உயரமுள்ள 'கோட்வின் ஆஸ்டென்' சிகரத்தின் உச்சியை அடைந்துவிட்டதாக இத்தாலிய மலையேறிகள் குழுவின் தலைவர் அறிவித்திருக்கிறார்.

ஜூலை 31-ம் தேதியன்று மலையுச்சியின்மீது அடி வைத்ததாக அவர் கூறினார்.

வெற்றி அடைந்தவர்களின் பெயர்களை அவர் வெளியிடவில்லை.

மலாயாவிலேயே முதலில் முழு வதும் செய்த ஒரு புதிய இரும்புக்கனிச் சுரங்கம் ஒன்றை 'பக்கிட்பேசான்' என்ற இடத்தில் சீக்கிரமே துவக்கக்கூடும் எனத் தெரிகிறது.

"திரு-தமிழர் அறப்போர் உரிமை வேட்கையின் விளைவு"

"தமிழருக்கு புத்தி கூறும் நேரு-பட்டம் தாணுவை கண்டிக்காததேன்"

"டில்லி சர்க்கார் மீது தமிழர் அவநம்பிக்கை கொண்டிருக்கின்றனர்"

நாகர்கோவிலில் மதியழகன் முழக்கம்

"திரு—கோச்சி தமிழக மக்கள் தாய்த் தமிழகத்துடன் சேர வேண்டுமென்று ஆரம்பித்திருக்கும் அறப்போர், உரிமை வேட்கையின் விளைவு! நியாயம், நீதி ஆகியவைகளின் அடிப்படையில் அமைந்தது! அவர்களின் கோரிக்கை நிறைவேறுவதைத் தடுப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. நேரு பண்டிதர், 'திரு—கோச்சி தமிழர்கள் தங்கள் போராட்டத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும்; சட்டத்திற்குக் கட்டுப்பட்ட செயல்களில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும்; ராஜீயப் புனரமைப்பு கமிஷன் இந்த காரியங்களுக்குப் பரிகாரம் கூறும்,' என்று அறிக்கை விட்டிருக்கிறார். சௌ-என்-லாயுடன் கை குலுக்கவும், இந்தோ-சீனா விஷயத்தில் மென்டஸ் பிரான்சின் மேதாவிலாசத்தைப் பாராட்டவும், மாலென்கோவுக்குத் தந்தி கொடுக்கவும் மட்டுமே நேரம் படைத்த நேரு பண்டிதர், தமிழர் நிலையைப் பற்றியும் நினைத்திருக்கிறார் என்பதற்கு நாம் நன்றி செலுத்த வேண்டித்தான் உள்ளது; ஆனால், ராஜீய கமிஷன் கவனிக்கும் என்று சொன்னால் தமிழர் அதனை எப்படி நம்புவது? அதன் அமைப்பும்—நடவடிக்கையும், தமிழர்களுக்கு அந்த எண்ணத்தைத் தர முடியுமா? காலங் கடத்துவதற்காகச் செய்யப்பட்டிருக்கிற கண்துடைப்பு வேலை என்று கருதுவதிலே என்ன தவறிருக்க முடியும்?"

"சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்று நேரு பண்டிதர் கூறியிருக்கிறார். திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தோன்றியவுடனேயா அறப்போர்க் களத்திலே குதித்தார்கள்? எத்தனை வேண்டுகோள்கள், எத்தனை தீர்மானங்கள், எத்தனை தூதுக் குழுக்கள் நடைபெற்றன; கடந்த இரண்டு மூன்று தேர்தல்களில் நேருவே நேரில் வந்து வேண்டியுங்கூட, அதை நிராகரித்து, தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டும் என்ற கொள்கைக்காக வாதாடுபவர்களுக்கே வாக்குகளை அளித்தார்களே! அதன் அர்த்தமென்ன?"

"இன்றைய தினம் நேருவின் தலைமையிலுள்ள டில்லி சர்க்கார் மீது தமிழர் அவநம்பிக்கை கொண்டுள்ளனர். நியாயமான பரிகாரம் கிடைக்குமா என்பதிலே சந்தேகம் தோன்றியுள்ளது. ஆந்திர மாகாணம் அமையவேண்டும் என்று ஆந்திர சகோதரர்களின் இதயத்தை உருக்கும் வேண்டுகோள் டில்லியால் நிராகரிக்கப்பட்டதே தவிர நிறைவேற்றப்படவில்லை. பொட்டி ஸ்ரீராமுலு என்பவரின் பிணம் கீழே விழுந்த பின்புதான், 'ஆந்திர மாகாணம் அமையும்,' என்ற ஆசி மொழி டில்லியிடமிருந்து பிறந்தது. இந்த நிகழ்ச்சிகளைக் கண்ட தமிழர்கள் திரு—கோச்சி தமிழகம், தாய்த் தமிழகத்துடன் சேருவதற்கு, தங்களில் சிலர் பொட்டி ஸ்ரீராமுலுக்களாக மாற வேண்டும் என்ற நிலை பிறக்குமானால், அந்த நிலைக்கும் இன்றைய தினம் எண்ணற்ற தமிழ் வாலிபர்கள் தயாராகி இருக்கின்றனர்; எனவே, இந்தப் போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவது உறுதி,"

—என்று, 31—7—54 சனிக்கிழமையன்று, நாகர்கோவில் முனிசிபல் மைதானத்தில் தோழர் ஜான் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் பேசுகையில் குறிப்பிட்டார்.

"நேருவுக்கு, தமிழருக்குத்தான் புத்திமதி கூற நேரமிருந்ததே தவிர, பட்டம் தாணுவைக் கண்டிக்க வார்த்தைகள் அகப்படவில்லையா? அல்லது இடையிலே யாராவது இருந்தால்தான் தங்கள் தர்பார் இன்பமாய் நடைபெறும் என்று எண்ணமா? பட்டம் தாணுவையே கேட்கிறேன்—நீங்கள் ஏவியிருக்கிற அடக்குமுறை எந்த ஜனநாயகத்திலே சேர்ந்தது? தலைவர்களை சிறையிலே அடைப்பதனால், தொண்டர்களைத் தடி கொண்டு தாக்குவதனால் எங்கேயாவது உரிமை உணர்ச்சி தடைபட்டது என்பதற்கு உதாரணம் உண்டா? பட்டம் தாணுவே சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்று நடத்தியவராயிற்றே! சி. பி. ராமசாமி அய்யரிடமிருந்த சிறைச் சிறைகளும், துப்பாக்கிக் குண்டுகளும், தடிகளும் விடுதலைக் கொடி பறப்பதைத் தடுக்கவா முடிந்தது?

ஐக்கிய மாகாணத்திலே தங்கள் மொழிச் செயலாளர் லோகியாவை கைது செய்துவிட்டது உத்திரப் பிரதேச அரசாங்கம் என்று கூறும் பிரஜா - சோஷலிஸ்டு கட்சி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 4—8—54 புதன்

ஐயமும் தெளிவும்!

பிரிட்டிஷ் தீவுகளில் வசிக்கும் மக்களில் பெரும்பாலோர், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து சென்று குடியேறியவர்கள். ஸ்பெயின், பிரான்ஸ், நெதர்லண்ட்ஸ் கடைசியாக ஸ்காண்டிநேவியா முதலிய தேசங்களிலிருந்து குடியேறிய மக்கள்தான் இன்றைக்கு ஆங்கிலேயர்களின் பெரும்பாலோர்!

அமெரிக்காவில் வசிக்கும் மக்களில் நாற்பது சதவிகிதம் ஜெர்மானியர்; ஸ்பானிஷ் பிரெஞ்சு மக்களும் அதிகம்; ஆங்கிலேயர்கள் பாதிக்கு மேல்!

இப்படித்தான் கனடாவிலும், ஆஸ்திரேலியாவிலும், நியூசிலாந்திலும்!

பல்வேறு இன மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் பிழைப்பைத் தேடி பிரிட்டிஷ் தீவுகளுக்கு வந்தனர்.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தவுடன், வேலையின்றி, வறுமையில் வாடிய அத்தனை ஐரோப்பியரும் அமெரிக்கா சென்றனர்.

இப்படி வெவ்வேறு இன, நாட்டு மக்கள் வெவ்வேறு நாடுகளுக்கு பிழைப்பைத் தேடிச் செல்வது, வரலாற்றுக்குப் புறம்பான விஷயமல்ல!

மனிதனின் வரலாறே, அவன் பிழைப்பைத் தேடி அலைந்து, பட்ட கஷ்டங்கள் தானே!

ஆனால், இதிலே கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், ஆங்கில நாட்டில் குடியேறிய பிரெஞ்சுக்காரனும் நார்வேக்காரனும் தங்களுடைய தாயகங்களுடைய நல்வாழ்விற்காக பிரிட்டிஷ் தீவுகளைக் காட்டிக் கொடுக்கவில்லை!

'ஆங்கிலேயன்' என்ற ஒரே உணர்ச்சியில், யுத்தங்கள் வந்தபோது, பிரெஞ்சு நாட்டையோ அன்றி, வேறு எந்த நாட்டையுமோ தாக்கத் தயங்கவில்லை.

பிரிட்டிஷ் தீவுகளின் செல்வம், நாட்டுக்காரர்களில் ஒருவராக அதன் நலனில் முழுப் பங்கேற்றுக்கொண்டனர்.

அமெரிக்காவில் இந்த வளர்ச்சி இன்னும் பிரத்தியட்சமாகத் தெரியும்.

அமெரிக்கக் குடியேற்றம் ஏற்பட்டு சுமார் முந்நூறு ஆண்டுகள்தான் ஆகிறது; ஆனால், அதற்குள், அமெரிக்காவில் வந்தவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து அமெரிக்கர்களாகி, அவர்களுக்கென்று தனி கலாச்சாரம், பண்பு, பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் உண்டாக்கிவிட்டனர்.

ஜெர்மானியர் போர் தொடுத்தபோது, அமெரிக்காவில் ஒருகாலத்தில் குடியேறிய ஜெர்மானிய குடும்பத்திலிருந்து தோன்றிய அமெரிக்கன் கூட அதனைக் கண்டித்துப் போரில் குதித்தான்!

பொருளை உற்பத்தி செய்வதிலும், சமுதாய வளர்ச்சியிலும், அரசியல் எண்ணங்களிலும், 'அமெரிக்கா' என்ற ஒரே எண்ணம் அவன் கண்முன் நின்றது—நிற்கிறது; ஆகவேதான், உலகத்திலேயே செல்வம் நிறைந்த நாடாக இரண்டு நூற்றாண்டுகளுக்குள் அமெரிக்கா வெளிவந்துவிட்டது!

இந்த உண்மைகளை வரலாற்று ஏட்டிலே காண்பவர் எவரும், எந்த இனத்தவராயினும், நாட்டினராயினும் ஒரு நாட்டு முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட அனைவரும் ஒன்றாக வாழலாம் என்பதை மறுக்க மாட்டார்கள்.

எல்லோரையும் ஒன்றாக எண்ணும் பல்வேறு இன மக்கள் ஒன்றாகக் கூடினால், சமரசம் நிலவுமே ஒழிய, அதற்காகப் போராட்டம் எழாது.

ஆனால்......ஒரு இன மக்கள் மற்றொரு இன மக்களை அடக்கி ஆள எண்ணி, நாட்டிற்குள் நுழைந்தால் நிச்சயம் போர் ஏற்படும்!

ஆங்கில நாட்டுக்குள்ளே ஜெர்மானியனும், பிரெஞ்சுக்காரனும், ஆங்கிலேயனும் ஒன்றாகக்கூடி, வாழ்ந்து ஒன்றுபட்ட ஆங்கில இனத்தோடு வர முடிந்தது.

ஆனால் அதே ஆங்கிலேயன் சுமார் முந்நூறு ஆண்டுகள் இந்திய உபகண்டத்தின் உலவியபோதும்கூட, கடைசியில் விட்டுவிட்டு ஓட வேண்டியிருந்தது.

இந்திய உப கண்டத்தில் வாழ்பவர்களை தங்களுக்குச் சமானமாகக் கருத மறுத்து, அவர்களைச் சுரண்டி, இந்திய உப கண்டத்தையே வேட்டைக்காடாக்கி வந்த காரணத்தால்தான், வெள்ளையன் வெளியேற்றப்பட்டான்!

ஆகவேதான், பல்வேறு இனங்கள் ஒன்றாக சேர்ந்து வாழ, அதற்கு முதல் தேவை, அவர்கள் வாழும் நாட்டின் முன்னேற்றத்தில் உண்மையான அக்கறையும் அவர்கள் எல்லோரும் சரி சமமானவர்கள் என்ற ஐக்கிய எண்ணமும் தேவை!

இந்த எண்ணம் கொண்ட மக்கள் எந்த இனமாக, எந்த தேசமாக இருந்தாலும் ஒன்றுகூடி வாழ்ந்து விடலாம்.

இப்படிப்பட்ட எண்ணங்கள் இங்கு வந்து குடியேறி இருக்கும் மார்வாரி, குஜராத்தி இனத்தவர்களுக்கு இருக்கின்றனவா?

இந்நாட்டு வாணியத் துறையில் பங்கெடுத்துக் கொண்டு, இப்பொழுது அந்தத் துறையில் அரசோச்சும் வட இந்தியர்களுக்கு எந்த அளவுக்கு திராவிடத்தின்மீது அக்கறை இருக்கிறது? எத்தனை மார்வாடிகள், லாபத்தின் ஒரு பகுதியை நாட்டு நலனுக்கோ, அன்றி சமுதாய முன்னேற்றத்திற்கோ செலவிட்டிருக்கின்றனர்? செலவிட்ட ஓரிருவரும் தங்கள் தங்கள் ஜாதி மக்களுக்காக ஓரிரு ஸ்தாபனங்களை ஏற்படுத்தியிருக்கின்றனரே தவிர, பொதுவாக 'திராவிடர்—திராவிட மக்கள்' என்று எண்ணி, என்ன உதவி செய்திருக்கின்றனர்? ஒன்றும் கிடையாது என்பது மாத்திரமல்ல; அதற்கு நேர் எதிராக இந்நாட்டின் செல்வத்தை உறிஞ்சி, அதைத் தங்கள் நாட்டுக்கு எடுத்துச் செல்கின்றனர்.

இங்கிருக்கும் முதலாளிகளும் ஏகாதிபத்தியமாகி, வடநாட்டு முதலாளித்துவம் அரசோச்சுகிறது! தொழிலாளிகள் நிலைமை இன்னும் மோசமாகிறது!

வாணிபத் துறையில், சுரண்டல் கும்பலாக அவர்கள் இருப்பதற்குக் காரணம், சமுதாயத் துறையில் அவர்கள் தனித்தே வாழ்வதுதான். உடம்பில் தெம்பிருக்கிறவரை திராவிடத்தில் வாணிபம் செய்து விட்டு, வயதேறியவுடன், கிடைத்த லாபத்தை சுருட்டிக்கொண்டு தன் தாயகம் செல்லும் போகாத குஜராத்தியும், மார்வாடியும் யார்?

'வெள்ளையன்' வாங்கும் ஓரிரு வட நாட்டுக்காரர்கள், அதுவும் 'ஆபீசர்' அளவில் பதவி வகித்தவர்கள்தான் சென்னையில் தங்கியிருப்பதைக் காண முடியுமே தவிர, மற்றபடி எந்த மார்வாடியும், குஜராத்தியும் தமிழகத்தை தாயகமாகக் கருதி, திராவிடர்களை தங்களின் ஒருவராகவோ அன்றி திராவிடரில் தாங்களும் ஒருவராகவோ எண்ணி வாழ்வதில்லை — வாழ்வதுமில்லை!

கோவையில் நேற்று முன்தினம் குஜராத்தி இளைஞர் சமாஜ சார்பில் நாடகமும், கூட்டமொன்றும் நடைபெற்றிருக்கிறது. அதில் நிதி மந்திரி சுப்பிரமணியம் தலைமை வகித்துப் பேசியிருக்கிறார்.

நிதி அமைச்சரை வரவேற்றும் பேசியவர்தன்னைத் தேவே என்ற குஜராத்தி சங்கத் தலைவர், "பல நூற்றாண்டுகளாக சென்னையில் வாழ்ந்து வரும் குஜராத்தியர், தங்கள் மாணவர்களுக்கு தமிழ்க் கல்லூரிகளின் இடம் கிடைக்காமல் தவிக்கின்றனர்; ஆகவே, குஜராத்தியரையும் ஒரு சிறுபான்மை வகுப்பினராகக் கருதி, தொழில் கல்லூரிகளில் சில இடங்கள் ஒதுக்கித் தர வேண்டும்!" என்று பேசியிருக்கிறார்.

தாரம் தவிக்கும்போது, கலைக்கண் காட்டியவள் 'வாசுமாலை வேண்டும்' என்று பிடிவாதம் பிடிப்பதுபோல, இங்கே நம் மாணவர்கள் பரிதாபமான நிலையில் கல்லூரி படிக்கட்டுகளை ஏறி இறங்கும் போது, குஜராத்தியர் இடம் ஒதுக்கச் சொல்லி கேட்பதும் விசித்திரம்தான்!

ஆனால், அதைவிட விசித்திரம், 'பல நூற்றாண்டுகளாக தமிழகத்தில் வாழ்கிறோம்,' என்று கூறும் இவர்கள், எந்த அளவு தமிழர்களோடு ஒன்றுபட்டிருக்கின்றனர்?

எத்தனை குஜராத்திகள் தமிழ் அறிவாளிகளாகி இருக்கின்றனர்? எவ்வளவு பேர் தமிழர் நடை, உடை, பாவனைகளை பின்பற்றியிருப்பர்?

இவைகள் எல்லாவற்றையும்விட, எத்தனை குஜராத்தி — திராவிடன் திருமணம் நடைபெற்றிருக்கும்?

பின் எந்த உரிமையை வைத்துக் கொண்டு கல்லூரிகளில் தனி இடம் ஒதுக்கச் சொல்லி அவர்கள் கேட்கின்றனர்?

இவைகளையெல்லாம் பற்றி நிதி அமைச்சர் கவலைப்படவில்லை. அகில இந்திய நோக்கு கொண்ட அவர், "குஜராத்தியர்களை தனி வகுப்பாகக் கருதி எந்தச் சலுகையும் கொடுக்கத் தேவையில்லை; காரணம், அவர்கள் நம் இராஜ்ய மக்களுடன் அநேகமாக இரண்டறக் கலந்துவிட்டனர்!" என்று பேசி இருக்கிறார்.

இந்த மாபெரும் உண்மையை கண்டுபிடிக்க நிதி அமைச்சர் எவ்வளவு கஷ்டப்பட்டாரோ நமக்குத் தெரியாது. ஒருவேளை வடநாடு — தென்னாடு என்ற பேச்சை மறைக்க அவர் ஞானோதயத்தில் தோன்றிய வாதமோ, அதுவும் தெரியாது!

உண்மைக்கு தொடர்பு இல்லாத வார்த்தைகளை அள்ளிக் கொட்டிய நிதி அமைச்சர், கடைசியாக தனது முடிவுரையில், "குஜராத்தியர்கள் இந்த ராஜ்யத்தில் மணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக்கொண்டு, இந்தப் பகுதி மக்களை கவனிக்க மறந்தால், வடநாடு — தென்னாடு என்ற கோஷங்கள் உண்மையாகும்!' என்று கூறி முடித்திருக்கிறார்.

இந்த இடத்திலேதான் நிதி அமைச்சருக்கு நாம் நாட்டு நிலைமையை எடுத்துக் காண்பிக்க வேண்டியிருக்கிறது.

'வடநாட்டார் லாப நோக்குடனேயே நம் நாட்டில் இருக்கின்றனர்,' என்பது, நிலைமை நமக்குத் தெரிகிறது!

ஆனால் நிதி அமைச்சருக்கு இன்னும் சந்தேகமாயிருக்கிறது. அந்த ஐயப்பாட்டிலேதான் நமக்கும் அவருக்கும் வித்தியாசமிருக்கிறது. அவருக்கு சந்தேகம்; நமக்கு தெளிவு!

ஐயம் தீர, அவருக்கு, நாட்டு நிலைமையை நாம் காண்பிக்கிறோம்; அதை அவர் உணர மறுக்கிறார். புரியாததாலா; புரிந்து கொண்டும், புரியாததுபோல இருக்க வேண்டியிருப்பதாலா?

நாகைக்குடியில் அண்ணாதுரை

காரைக்குடி, ஆக. 2—

திருவாரூர் தமிழர் அறப்போர் நிலையை நேரில் கண்டறிந்துவிட்டு, திரும்பிய தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் காரைக்குடிக்கு வருகை தந்திருந்தார்கள். 1—8—54 ஞாயிறு அன்று மாலை 4 மணிக்கு காரைக்குடி புதுச்சந்தைப் பேட்டை பாண்டியன் பகுத்தறிவு படிப்பக ஆண்டு விழாவிலும், காந்தி சதுக்கத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்திலும் சிறந்த அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

கூட்டத்திற்கு தோழர் அ. பொன்னம்பலனார் தலைமை தாங்கினார்.

பல ஆயிரக்கணக்கான பொது மக்களும், ஏராளமான தாய்மார்களும், எண்ணற்ற மாணவர்களும் பொதுச் செயலாளரின் சொற்பொழிவைக் கேட்டனர்.

மெண்டே பிரான்ஸ் — மன்னர் சந்திப்பு

டுனிஷியாவிற்கு புதிய பிரதமர்

டுனிஸ், ஆக. 2—

ஜூலை 1950-க்குப் பிறகு டுனிஷியாவில் மறுபடியும் மந்திரி சபை அமைக்கப்படுகிறது.

டுனிஸ் மன்னர், டஹார் பென் அமார் என்ற அரசியல் தலைவரைக் கூப்பிட்டு மந்திரி சபை அமைக்க கட்டளையிட்டிருக்கிறார்.

டுனிஷியாவிற்கு சுயாட்சி கொடுப்பது என்று பிரெஞ்சு பிரதமர் மெண்டே பிரான்ஸ் அறிவித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட மாறுதல்களே இவை.

டுனிஷிய மன்னரை சந்தித்துப் பேசிய மெண்டே பிரான்ஸ் இன்று பாரிஸ் திரும்பினார்.

டுனிஷிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரில் ஒருவரான மோங்கிஸிம் வீட்டில் போடப்பட்டிருந்த பாதுகாவல் படையை வாபஸ் செய்து, அவரை விடுதலை செய்தது டுனிஸ் சர்க்கார். விடுதலையடைந்த ஸிலிம், டுனிஸ் மன்னரை சந்தித்துவிட்டு, பாரிஸில் இருக்கும் டுனிஸ் தேசியக் கட்சித் தலைவரான பவுர்கிபாவை சந்தித்து பேச விமானம் மூலம் பாரிஸ் புறப்படுகிறார்.

புதிய மந்திரி சபை, மெண்டே பிரான்ஸின் சுயாட்சித் திட்டத்தைப் பற்றி பிரெஞ்சு சர்க்காருடன் விவாதிக்கும்.

தெ. ஆ. நிறவெறியைத் தடுக்கவும்!

ஐ. நா. கமிஷனுக்கு தெ. ஆ. கா. வேண்டுகோள்

ஜோகன்ஸ்பர்க், ஆக. 1—

தென் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ், தென் ஆப்பிரிக்க இந்திய காங்கிரஸ் ஆகிய இரு அமைப்புகளும் கூட்டாக ஐ. நா. சபையின் இனவாரிக் கமிஷனுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில், தென் ஆப்பிரிக்காவில் காணப்படும் நிற வேற்றுமைப் பிரச்சினையில் உடன் தலையிட்டு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறது.

நிறவெறிக் கொள்கை தாங்கிக்கொள்ள முடியாத அளவு எல்லை மீறிவிட்டது என்றும், தேசிய சர்க்கார், வெள்ளையரல்லாதாரை அடிமைகளாக மாற்றிவிட்டதென்றும், தேசிய சர்க்காரின் போக்கினை சட்டபூர்வமான முறைகளில் எதிர்ப்போரை சர்வாதிகாரப் போக்குடன் போலீசாரின் பயங்கர நடவடிக்கைகளால் அடக்குகின்றனர் என்றும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ. நா. சபையின் இனவாரிக் கமிஷன் ஆப்பிரிக்காவில் உள்ள நிற வெறியைப் பற்றி ஆராய ஆப்பிரிக்காவுக்குள் செல்ல ஆப்பிரிக்க சர்க்காரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இக்கமிஷன் ஜினிவாவில் இருந்து கொண்டே தனது விசாரணையை நடத்துகிறது.

இக்கமிஷனுக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரானது இது இரண்டாவதாகும்.

மக்கள் எழுச்சியின் நசுக்கப்படுகின்றனர் என்றும், சட்டபூர்வமான பொதுக்கூட்டங்களிலும் போலீசார் தலையிடுகின்றனர் என்றும் மேலும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கென்யா நிலை

இந்திய உதவி கோரப்படுகிறது

நடந்த இரண்டு மாதங்களாய் நடைபெறும் மவ் மாவ் இயக்கத்தை நல்ல முறையில் முடிப்பதற்காக இந்தியாவின் உதவியை நாடவேண்டுமென்று பிரிட்டிஷாரும், இதர குடியேற்ற நாட்டு அரசாங்கங்களையும் மற்றும் பூத்திட்ட கென்யாவின் உள்ள சுமார் பதினையாயிரம் இந்தியர்கள் கூடித் தீர்மானித்தனர்.

"ஆட்சி பீடம் அமரும்போதெல்லாம் அழிவு வேலை செய்தார் ஆச்சாரியார்!"

தொழிலாளர் துயர் நீங்க, பிரயாணிகள் அல்லல் ஒழிய 'டிராம்' போக்குவரத்து மீண்டும் வேண்டும்

சென்னையில் என்.வி. நடராசன் பேச்சு

31—7—54 மாலை சென்னை பேசின்பிரிட்ஜ் திடலில் தோழர் சண்முகம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் என். வி. நடராசன் பேசியதாவது:—

"சென்னை மாநிலத்தின் ஆட்சி பீட முதல்வராக ஆச்சாரியார் அவர்கள் பதவி ஏற்கும் காலங்களில், இம்மாநில ஏழை-நடுத்தர மக்களின் வாழ்வை சீர்குலையச் செய்யும் அநீதிகள் தலைவிரித்தாடி வந்திருப்பதை நமது மாநில வரலாறே எடுத்துக் காட்டும்.

1938-ம் ஆண்டில் ஆச்சாரியார் ஆட்சியின்போதுதான் சென்னை நகரின் மூன்று ஆலைகளில் ஒன்றான சூளை மில் மூடப்பட்டு, ஆயிரக்கணக்கான தொழிலாளர் தோழர்கள் அல்லலுற நேரிட்டது!

இம்முறை மூவாயிரம் தொழிலாளர்களையும், அத்தொழிலாளர்களின் குடும்பங்களையும் கொடுமைக்கு ஆளாக்கும் வகையில் சென்னை டிராம்வே சர்வீசுக்கு முடிவிழா செய்த வெள்ளைக்கார கம்பெனிக்குக் கைலாகு கொடுத்தது ஆச்சாரியார் ஆட்சி!

ஆச்சாரியார் அவர்களுக்குப் பாட்டாளி மக்கள்மீது உள்ள படியே நல்ல எண்ணம் இருக்குமானால், வெள்ளையர் அக்கம்பெனியை மூடாது தடுத்திருக்கலாம்; அல்லது சர்க்காரரே அத்தொழிலை ஏற்று நடத்தியிருக்கலாம்; ஆனால், ஆச்சாரியாரோ, 'வீடு பற்றி எரியும்போது சுருட்டுக்கு நெருப்பு கேட்டவன்,' கதையைப் போல, இத்தனை நாட்கள் சென்னை நகரில் டிராம்கள் ஓடியிருந்தது ஒரே இரைச்சலாக இருந்தது; இப்போது அமைதியாகவும், சென்னை நகருக்கே தனி அழகாகவும் இருக்கிறது என தத்துவார்த்தம் பேசிக் கொண்டிருக்கிறார்.

சென்னை மாநிலத்தைவிட பொருளாதாரத்தில் மிஞ்சிய பம்பாயில்—முதலாளித்துவத் திமிங்கலங்கள் பெருகியுள்ள பம்பாயிலே, கல்கத்தாவிலே, இன்னும் சொல்லவேண்டுமானால் விஞ்ஞானத்திலே முன்னணியில் நிற்கும் மேல்நாடுகளிலும் டிராம் சர்வீஸ்கள் ஓடும்போது, சென்னை நகரில் ஓடினால் அழகு கெட்டு விடுமாம்! ஓயாத இரைச்சலாம்! ஆச்சாரியார் இவ்வாறெல்லாம் அர்த்தமற்ற பேச்சுக்களைப் பேசி வருகிறார்!

சென்னை நகரில் டிராம் ஓடுவது இரைச்சலாக இருக்கிறது என்று கூறும் ஆச்சாரியாரின் காதுகளிலே, டிராம்வே தொழிலாளர் இல்லங்களில் இன்று போடப்படும் இரைச்சலும், நடுத்தர வகுப்பினர் டிராம் வசதியில்லாததால் படும் அவதியும், முணுமுணுப்பும் ஆச்சாரியாரின் காதுகளிலே விழவில்லைபோலும்! விழாதுதான்—ஏனெனில் அவர் கேளாக் காதரல்லவா!

ஆச்சாரியார் ஆட்சியிலே நடைபெற்ற இக்கொடுமையை அன்றைய த. நா. கா. க. தலைவர் காமராசர் மிகவும் கண்டித்தார். டிராம்களை மீண்டும் கட்டாயம் ஓடச்செய்ய வேண்டும் என்றும், சர்க்கார் இது குறித்து தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்றும் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

இன்று அவரே முதலமைச்சராக இருப்பதால், ஆச்சாரியார் ஆட்சியில் நடைபெற்ற பெரும் அநீதிகளுக்கு முற்றுப் புள்ளி வைத்ததுபோலே, இப்பிரச்னையையும் காமராஜ் அவர்கள் கவனித்து உடனடியாக ஆவன செய்யவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரசபையே டிராம் சர்வீசை ஏற்று நடத்தவேண்டுமென்று முயற்சி செய்து வருகிறது: ஆனால், அவ்வேலைக்கே 28 லட்ச ரூபாய் சர்க்கார் தந்து உதவினால் நடத்தத் தயார் என்றும், நகரசபையிடம் பணம் இல்லையென்றும் கூறுகிறது. இதன் விவரத்தை எனக்கு முன் பேசிய 7-வது வட்ட நகரசபை உறுப்பினர் ராமலிங்கம் கூறினார். 'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்ற கதை போல, டிராம்வே சர்வீசை யார் நடத்துவது என்று போட்டி போடாமல், சர்க்கார் முன்வந்து அத்தொகையை நகரசபைக்குக் கொடுத்தோ அல்லது சர்க்காரே அதை ஏற்று நடத்தியோ உடனடியாக அத்தொழிலாளர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் ஆன நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமென்று முதலமைச்சர் காமராஜர் அவர்களை தி. மு. கழக சார்பில் வேண்டிக்கொள்கிறேன்.

சென்னை நகரசபையிலே பணம் இல்லை யென்று கையை விரித்து விடுவதால், நகரசபையோ அல்லது நகரசபை உறுப்பினர்களோ இப்பிரச்னையின் தங்கள் கடமை தீர்ந்துவிட்டது என்று கருதினால், அது மிகவும் ஏமாற்றச் செயலேயாகும். நகரசபையின் பணம் இல்லையெனில், அத்தொகையை சர்க்கார் கொடுத்துதவ வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி ஒவ்வொரு வட்ட நகரசபை உறுப்பினர்களும் பொதுக்கூட்ட வாயிலாக தீர்மானம் நிறைவேற்றி அமைதியான கிளர்ச்சியின் மூலம் சர்க்காரை ஆவன செய்யுமாறு தூண்ட வேண்டும். இத்தகைய காரியத்தைக்கூடச் செய்ய முன்வராத நகர சபை உறுப்பினர்களுக்கு அடுத்த நகரசபைத் தேர்தலில் பொது மக்கள் ஆதரவு தரக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நகரசபை மேயரும், எல்லா உறுப்பினர்களும் பொது மக்களின் எண்ணத்தைத் திரட்டி சர்க்காருக்கு எடுத்துக் காட்டினால், அவசியம் இணங்கியே தீருவர்; எனவே, இவ்விஷயத்தில் நகரசபை உறுப்பினர்கள் ஆவன செய்ய உடனடியாக முன்வர வேண்டுகிறேன்.

28 இலட்ச ரூபாய் என்பது சர்க்காருக்கு பெரும் இடுக்கிடு தக்க தொகையல்ல; எவ்வளவோ தேவை திட்டங்களுக்கெல்லாம் ஏழை மக்களின் வரிப் பணத்தை விரயமாக்கிவரும் சர்க்கார், அதே ஏழைமக்களின் நலனுக்குச் செலவழிப்பதற்குப் பணம் இல்லையென்று கைவிரிப்பது கண்ணியமாகாது!

உதாரணமாக — ஆச்சாரியார் தமது பிடிவாதத்தின் துணை கொண்டு சர்வாதிகார முறையிலே குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். எல்லாக் கட்சியினரும் அதை எதிர்த்தனர்; எனினும் அவர் மனமாற்றம் அடையவில்லை. தி. மு. கழகத்தின் மீது அடக்குமுறையை ஏவினார்; 5,000 பேரை சிறைப்படுத்தினார்; கடுமையான அடக்கு முறையில் மூழ்கினார்; 10 மாதங்களுக்குப் பிறகு அத்திட்டமும் தொலைந்தது; ஆச்சாரியாரும் வெளியேற்றப்பட்டார்!

இத்தோல்வித் திட்டத்திற்கு பாழான பணம் எத்தனை லட்சம் இருக்கும்? ஆகவே, இப்போர்ப்பட்ட உருப்படியாகாத திட்டங்களுக்கு லட்சக்கணக்கில் அதிலும் மக்களின் சம்மதம் பெறாமலேயே மக்களின் வரிப் பணத்திலிருந்து செலவிட்டிருக்கும்போது மக்களுக்கான ஒரு நல்ல காரியத்திற்கு செலவிடும்படி அதே மக்கள் வேண்டுகோளாகக் கேட்கும்போது முதலமைச்சர் காமராஜர் மறுக்கமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

எனவே, நகரசபை உறுப்பினர்களும், எல்லாக் கட்சியினரும் இப்பிரச்னையில் முக்கிய அக்கறை செலுத்தி தொழிலாளர் அவதியைத் துடைக்க வேண்டுகிறேன்.

தி. மு. கழகத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே சர்க்காருக்கும், சென்னை முதலமைச்சர் காமராஜருக்கும், இப்பிரச்னைகுறித்த வலியுறுத்திக் கூறியிருக்கிறது. இன்னும் சொல்லவேண்டுமானால் டிராம்வே போன்ற பெரிய தொழில்கள் நகரசபைக்கோ அல்லது சர்க்காருக்கோ உரிமையுடையதாக அதாவது பொதுச் சொத்தாக ஆக்கப்பட வேண்டும் என்று பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள் பலமுறை விளக்கியிருக்கிறார்.

அதற்கேற்றதுபோல, சவ்வளவிலோ, வெள்ளைக்கார கம்பெனி வெளியேற முடிவு கட்டி விட்டது. இத்தருணத்தை நழுவ விடாமல் பயன்படுத்தும் வகையில் டிராம்வே சர்வீசை சர்க்கார் ஏற்று நடத்தவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். சர்க்கார் ஏற்று நடத்தினால் எவ்விதத்திலும் நஷ்டம் வராது.

தோழர் மணவாளர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

துவக்கத்தில் கே. ராமலிங்கம், எம். கி., ஆர். ஜார்ஜ், கி. ஆர். பாலசுந்தரம் பேசினர்.

பார்மோசா - விடுதலை!

சீனத் தளபதி உறுதி

லண்டன், ஆக. 1—

"பார்மோசா விடுதலை படையா முன்னர் நாம் சீனர்களின் கௌரவத்தின் மீதுள்ள கரும் புள்ளியைத் அடைத்தவர்களாக மாட்டோம்; அதுவரையில் நாமெல்லாம் பெருமைப் படும்படியாக எக்காரியமும் இல்லை,"

என்று கம்யூனிஸ்டு சீனப் படையின் தளபதி சூ-டே சீன விடுதலைப் படையின் 17-வது ஆண்டு விழாவில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பார்மோசா விடுதலை என்பது, சீனாவின் உள்நாட்டு விவகாரமாகும். இதில் மற்ற நாடுகள் தலையிட அனுமதியோம்.

"சியாங் கும்பலுக்கு அமெரிக்கா உதவி அளிக்கிறது. அடுத்து அடுத்து அமெரிக்கா செய்யும் ஏகாதிபத்திய நடவடிக்கைகளும், குற்றங்களும், நமது நாட்டின் பாதுகாப்பினையும், உலகின் அமைதியையும் பயமுறுத்துகின்றன. இதை சீனர்களும், அமைதியை விரும்பும் மக்களும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்." சீன எல்லையில் அமெரிக்க விமானங்களும், கப்பல்களும் அத்து மீறி நுழைந்து தொல்லை தருகின்றன என்று மேலும் தெரிவித்தார்.

கழகச் செய்திகள்

சென்னை ராயப்பேட்டை

சென்னை இராயப்பேட்டை 37 வது வட்ட தி மு கழகம் மணிமனை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, புதிதாகக் கொடியேற்றுவிக்கப்பட்டு, மும்முனைப் போராட்டம் பற்றி விளக்கவுரை ஆற்றப்பட்டது.

மீஞ்சூர்

25—7—54 மாலை தி மு கழகச் சார்பில் தோழர் எம். கேசவன், தலைமையில், டி. இராமசாமி, என். வி. தங்கசாமி, தேவதாஸ், புலியரசன் மும்முனைப் போராட்டம்பற்றி சொற்பொழிவாற்றினர். போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்களுக்கு வீர வணக்கம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

மாகாளிபட்டி- கீரைத்துறை

18—7—54 மாலை 4 மணிக்கு நெடுஞ்செழியன் மன்றச் செயற்குழுக் கூட்டம் தோழர் சுப. இராமநாதன் தலைமையில் கூடி மும்முனைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தலைவர்களையும் தொண்டர்களையும் பாராட்டியும் உயிர்நீத்த தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தியும், தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

பேரூர்

15—7—54 மாலை 5½ மணிக்கு தி. மு கழகச் சார்பில் தோழர் என். குருசாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் எம். மருதமுத்து, பெரியசாமி, பி. கனகராஜன் ஆகியோர் பேசினர்.

நாசிங்கபுரம் (ஆத்தூர் சேலம்)

15—7—54-ல் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. மாலை 4 மணிக்கு 32 காளைகள் பூட்டிய வண்டியில் அண்ணா, நெடுஞ்செழியன், கருணாநிதி ஆகியோர் படங்களுடன் ஊர்வலம் என். டி. பெருமாள் தலைமையில் சென்று இரவு 9 மணிக்கு பிள்ளையார் கோவில் முன்னிலையில் வந்தடைந்தது. தோழர் என். எஸ். கோவிந்தசாமி தலைமையில் மும்முனைப் போராட்ட வெற்றி விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் குருநாதன், என். எம். மாணிக்கம், என். கே. இராஜா சொற்பொழிவாற்றினர்.

மன்னார்குடி

15—7—54ல், மன்னார்குடி நகர தி மு. க. (கிளை) சார்பில், சைகிள் ஊர்வலம், நகரின் முக்கிய வீதிகளின் வழியாக வந்து பந்தலடியில் தோழர் இரா. கணேசன் கொடியேற்றி விழா கொண்டாடப்பட்டது.

புத்திரகவுண்டம்பாளையம்

15—7—54ல், அண்ணா மிதிவண்டி நிலையத்தில் விழா கொண்டாடப்பட்டது. வீதிகள், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது. வெடிமுழக்கம் எழுப்பப்பட்டது. மக்களுக்கு சந்தனம், வெற்றிலை பாக்கு, இனிப்பு, கடலைபொரி, பழம் வழங்கப்பட்டது.

புளியங்குடி

15—7—54ல், இரா. அண்ணாதுரை நூல் நிலையத்தில் தோழர் பி எஸ். பத்மநாபன் தி. மு க. கொடியை ஏற்றிவைத்தார்.

ஆப்ரகாம் லிங்கன் அமெரிக்காவில் கேலி பேசப்படும் விந்தை!

நீக்ரோவைப் பிரித்து வைக்க சூழ்ச்சி

உயர் நீதிமன்ற முடிவுக்கு உலை வைக்க முயற்சி!

அரசியல் சட்டத்தைத் திருத்த யோசனையாம்!

ஜாக்சன் (மிசிசிப்பி), ஆக. 2—

நீக்ரோக்கள், 'தாங்களாகவே விரும்பி,' இன ஒதுக்கல் கொள்கையை ஏற்றுக் கொள்வார்கள் என்ற தனது யோசனையை நீக்ரோவர்கள் நிராகரித்துவிட்டது கவர்னர் ஹக் ஒயிட் என்பாருக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்துள்ளதாம்! மிசிசிபியில், ஒதுக்கல் கொள்கையைத் தொடர்ந்து நீடிக்கச் செய்யும் வகையில் பொதுப் பள்ளிகள் அத்தனையையும் மூடிவிட முடிவு காண்பதற்காக செப்டம்பர் 7-ந் தேதியன்று சட்டசபை கூடுமாம்!

தனித்தனியான, ஆனால், ஒரே நிலையில் உள்ள பள்ளிகள் வைத்துக்கொள்வதை நீக்ரோவரில் சிலராவது ஏற்றுக்கொள்ளக் கூடும் என, அவர், பின்னுட்கள் முன்புவரை நம்பினாராம்.

சமீபத்தில் அமெரிக்க உயர்நீதி மன்றம் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக அளித்த முடிவைத் தட்டிக்கழிப்பதற்காக, சென்ற சட்டசபைக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கல்வித்துறை ஆலோசனைக் குழு, அமெரிக்க அரசியல்சாசனத்திற்கே ஒரு திருத்தத்தை மிசிசிப்பி சட்டசபையில் கொண்டுவர யோசனை கூறியிருக்கிறதாகத் தெரிகிறது. அது பற்றியும் சட்டசபை ஆலோசனை செய்யும் எனத் தெரிகிறது.

மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகளால் இந்த அரசியல் சட்டத் திருத்தப் பிரரேபணை வெற்றி பெற்றால், வரும் பொதுத் தேர்தலில் மக்களால் சட்டசபையின் இம்முடிவு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மிசிசிப்பியின் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் நீக்ரோவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வித் துறை குழுவினருடன் பேச்சு வார்த்தைகள் நடத்த கவர்னர் ஒயிட் பில் அழைக்கப்பட்டிருந்த 95 நீக்ரோக்களில் மிகப் பெரும்பான்மையோர் 'தாங்களாக விரும்பி இன ஒதுக்கல் செய்யும் கொள்கை'யின் ஒரு சிறு அணுவையும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டிருக்கின்றனர்.

"இன ஒதுக்கல் கொள்கையைப் பாதுகாக்கும் பொருட்டு நீக்ரோவப் பள்ளிகளின் கட்டிடங்களைப் புதுப்பித்துத் தருகிறோம்; ஒதுக்கல் கொள்கையை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்ற அந்தக் கல்வி ஆலோசனைக்குழுவின் கோரிக்கையையும் நீக்ரோவர் நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

பின்தங்கிய வகுப்பு விசாரணைக் குழுவின் அங்கத்தினர் தோழர் லாலா ஜெகன்னாத் ராஜினாமா செய்துவிட்டதால் அப்பதவிக்கு பி. ஜி. ஷா நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

உலக அரங்கில்

கெய்ரோ :

எகிப்திய நாட்டிற்கு பொருளாதார, இராணுவ உதவி செய்வது குறித்து அமெரிக்க நாட்டுத் தூதர், எகிப்திய வெளிநாட்டிலாக்கா மந்திரியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகத் தெரிகிறது.

* * *

பிரிட்டன், எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள சூயஸ்கால்வாய் பற்றிய ஒப்பந்தத்திற்குப் பிறகு, வெள்ளைக்கார இராணுவ முகாம்களுக்கு, எகிப்திய வியாபாரிகள் உணவுப் பொருள் வியாபாரம் செய்யக் கூடாது என்ற தடையை, எகிப்திய அரசாங்கம் நீக்கிவிட்டதாகத் தெரிகிறது.

* * *

அரபிய முகம்மதிய உலகத்தின் பிரச்னைகள் குறித்து விவாதிக்க சவூதி அரேபிய மன்னர். மெக்காவிற்கு யாத்திரைக்கு வரும் எல்லா முஸ்லீம் தலைவர்களையும் கொண்ட மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிகிறது.

★

லண்டன் :

பிரிட்டிஷ் வெளி விவகார மந்திரி அந்தோனி ஈடன் இந்த வார முடிவில், மூன்று வாரத்திற்கு ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக, ஆஸ்ட்ரியாவிற்குச் செல்வாராம்.

* * *

இந்தியாவிலிருந்து சோவியத் யூனியனுக்குச் சென்றுள்ள ரயில்வே தூதுக் குழு, மாஸ்கோவிலிருந்து லெனின்கிராட் நகருக்குப் புறப்பட்டதாக சோவியத் செய்தி நிறுவனமான 'டாஸ்' அறிவித்தது.

★

வாஷிங்டன் :

ஐ. நா. பொதுச் சபையின் அடுத்த கூட்டத் தலைவராக, திருமதி விஜயலட்சுமி பண்டிட்டிற்குப் பிறகு தாய்லாந்து வெளிநாட்டிலாக்கா மந்திரி வான்வைத்தாயகன் என்பவருக்கு ஓட் அளிப்பதாக, அமெரிக்கா வாக்களித்திருக்கிறதாம்.

ஜார்ஜ்டவுன் :

பிரிட்டிஷ் கயானாவின் கலைக்கப்பட்ட மந்திரி சபையில் போக்குவரத்து மந்திரியாயிருந்த ஜெய் நாராயண் சிங் என்பவர் லந்தின் அமெரிக்கத் தலைநகரங்களில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். பிரெஞ்சு, டச்சு, பிரிட்டிஷ் ஆகிய ஏகாதிபத்தியங்களின் பிடியிலிருக்கும், மூன்று கயானாக்களின் விடுதலைக்கு ஆதரவுதர வேண்டுமென மக்களைத் திரட்டிக்கொண்டிருக்கிறார் அவர்.

★

தெஹ்ரான் :

டேனிஷியாவின் புதிய முதன் மந்திரியாக்கப்பட்டுள்ள தாகர் பென் அமீர் என்பவர் தனது மந்திரி சபைப் பட்டியலைத் தயாரித்து விட்டதாகத் தெரிகிறது. அந்த மந்திரி சபை, பிரெஞ்சு அரசாங்கத்துடன் சுயாட்சி பற்றி பேச்சுவார்த்தைகளை நடத்தும் எனத் தெரிகிறது.

★

ரபாட் :

பிரெஞ்சு மொராக்கோவின் முன்னாள் சுல்தான் முகம்மது பென் யூசுப் நாட்டிற்குத் திரும்பி வருவதை ஒட்டி மொராக்கோவினர் நடத்திய ஆர்ப்பாட்டங்களில் நான்கு பேர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

★

ரங்கூன் :

பர்மிய வர்த்தக மந்திரி தாக்கின் தாகின் உடல் நலக் குறைவின் காரணமாக தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டதாகத் தெரிகிறது.

★

ஹாங்காங் :

வியட்மின், தோய்வாய்ப்பட்ட அல்லது காயம்பட்ட பிரெஞ்சுக் கைதிகளில் 120 பேர்களை பிரெஞ்சு அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாக ரேடியோ மூலம் அறிவித்துள்ளது.

★

சிட்னி :

பிரிட்டன், இந்தியா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் உள்ளிட்ட 32 நாடுகள் பங்கு கொண்டுள்ள 'அகில உலக பாரம்பர வர்த்தக வாரம்' துவக்கி வைக்கப்பட்டது.

சிறைச்சாலை நமக்கு..........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

...பினர் இது எந்த வகையில் நியாயம் என யோசிக்க வேண்டும்; அதற்காக ஆர்ப்பரிக்கும் ஆச்சாரிய கிருபளானிகள் இதுபற்றியும் சிந்திக்க வேண்டும்.

எந்தக் காங்கிரஸ் மொழிவழி மாகாணத்திற்குப் போராடு—வழிகோலும் என்று அடிமை நாட்களிலே கூறியதோ, அதே காங்கிரஸ், இன்றைய தினம் தனது வாக்குறுதியை காற்றிலே பறக்கவிட்டு விட்டது. அதன் மூலவர் நேரு, தெற்கே மொழியால் வேறுபட்ட தமிழர், தெலுங்கர், மலையாளிகள் ஒருவரோ டொருவர் அடித்துக் கொண்டிருந்தால் மட்டுமே தனது ஆதிக்கமும், வடநாட்டு ஆதிக்கமும் நீடிக்கும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

எனவே, தமிழர்கள் இந்தியாவை போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுடைய போராட்டம் பட்டம் தாணுப் பிள்ளையிடம் மட்டுமல்ல — அதிகாரங்களைக் குவித்து வைத்திருக்கும் டில்லி சர்க்காருடனும் இருக்கிறது.

டில்லி சர்க்காருக்குத் துணையாக பட்டம் தாணுப் பிள்ளையானாலும் சரி, பனம்பள்ளி கோவிந்தமேனனானாலும் சரி யார் வந்தாலும், அவர்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு தமிழர்கள் தயாராகிவிட்டார்கள்.

இந்தப் போராட்டம் டில்லிக்கும்—தமிழருக்கும் நடக்கும் போராட்டம்! இந்த அடிப்படை உண்மையை மறைத்தும் பயனில்லை.

மலையாளிகளுக்கும் தமிழர்களுக்கும் நடக்கும் போராட்டமல்ல, இது! மலையாளிகளுக்கு எப்படி ஐக்கிய கேரளம் தேவையோ, அப்படித்தான் தமிழர்களுக்கும் ஐக்கிய தமிழகம் தேவை.

இதை மலையாளி - தமிழர் என மாச்சரியத்தை மூட்டுகிறவர் பயன்படுத்தக்கூடாது; அதை தோற்கடிக்கவும் வேண்டும். மலையாளி—தமிழர் ஒற்றுமை ஓங்குவதற்குக்கூட இந்த பிரிவினை பெற்றாக வேண்டும். அப்போதுதான் நாம் ஒன்றாகக் கூடமுடியும்.

வெள்ளையர் இந்தியாவிற்கு விடுதலை தருவதற்கு முன்பு பிரிட்டிஷ்காரன் மீது இருந்த வெறுப்பு எவ்வளவு? அவையெல்லாம் இன்று எங்கே?

சுதந்திர வீரர் நேரு, எலிசபெத் அரசியின் மகுடாபிஷேகத்திற்கு லண்டன் போகிறார்; விஜயலட்சுமி பண்டிட் பக்கிங்காம் அரண்மனையில் விருந்துண்கிறார்; வெள்ளைக்காரத் தலைவர்களுடன் அளவளாவுகிறார்; மவுண்ட்பேட்டனுக்கும், லேடி மவுண்ட்பேட்டனுக்கும் நேரு என்றால் உயிர்; பமீலா மவுண்ட்பேட்டனுக்கு நேருவைப் பார்க்காவிட்டால் தூக்கம் பிடிக்கவில்லை — என்ற நிலைமை எப்படி வளர்ந்தது?

அதுபோலவேதான், தாய்த் தமிழகத் துடன் திரு — கொச்சி தமிழகம் சேர்ந்தால் சிறு மனமாச்சரியமும் மறையும். மொழி வழி ராஜ்யம் என்பது 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதன் ஆரம்பவாசல்!

எனவே, இந்த மொழி வழி அரசு அமைக்கும் அறப்போரில் தி. மு. க. கலந்து கொள்கிறது. ஆகஸ்ட் 6-ல் நடைபெறும் அடையாள மறியலில் பங்கு கொள்ள மக்கள் முன்வர வேண்டும்.

பட்டம் சர்க்காரில் நம் எல்லோரையும் அடைக்கும் அளவிற்கு இடமில்லை. அந்தக் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் அறப்போர் வீரர்களைக் குண்டாந்தடி கொண்டு தாக்கக்கூடும். அந்த தடியடிகளைப் பூச்செண்டுகளாகக் கருத வேண்டும். அந்தத் தழும்புகள் விடுதலைப் போரில் நாம் பெற்ற வெற்றிப் பதக்கங்கள்! அதை இந்த நாடு ஒரு நாளும் மறக்காது! தாயகம் உள்ளவரை பாராட்டியே தீரும்!

சிறைச்சாலை நமக்கு ஒன்றும் புதிதல்ல! நாமே, நாடு என்ற பெரும் சிறைச்சாலையிலே இருக்கிறோம். அங்கேயும் சென்று வருகிறேன் என்று வீரர்கள் களம்புக வேண்டும்.

ஆகஸ்ட் 6-ம் தேதி நீங்கள் நடத்த இருக்கும் "அடையாள மறியல்" தி. மு. கழகத்தின் பெருமைக்கும், தகுதிக்கும் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். பொதுச் செயலாளர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடும் கண்ணியம்—கட்டுப்பாடு—கடமை ஆகியவைகளிலிருந்து சிறிதும் வழுவக் கூடாது.

ஆர்வம் வேண்டும்—ஆத்திரப்பட்டுவிடக் கூடாது! உணர்ச்சி வேண்டும்—அது உதவாக்கரைச் செயல்களுக்கு பயன்பட்டுவிடக் கூடாது! எழுச்சி வேண்டும்—அது நமது மக்களின் எழில் வாழ்விற்கு பயன்பட வேண்டும்!"

தோழர் மதியழகன் மேலும், ஆகஸ்டு 6-ம் தேதி அடையாள மறியலில் பங்குகொள்ள வேண்டிய அவசியம் குறித்தும், திரு—கொச்சி தமிழகப் பிரச்சினையில் தி. மு. க. கொள்கை குறித்தும், திரு—கொச்சி சர்க்கார் அடக்குமுறை குறித்தும் சொற்பொழிவாற்றினார். தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிந்தது.

ஈரான் எண்ணெய்க் கிணறுகள்: அக்டோபரில் உற்பத்தி துவங்கும்

புதிய ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது!

தெஹ்ரான், ஆக 3—

ஈரான் எண்ணெய்க் கிணறுகளில் அக்டோபரில் மீண்டும் வேலை துவங்குமென்று தெரிகிறது.

மூன்றாண்டுகளாக அமைதியுடன் இருக்கும் எண்ணெய்க் கம்பெனிகளில் மீண்டும் உற்பத்தியைத் துவங்க இப்போது ஈரானுக்கும் ஆங்கிலோ - ஈரானிய எண்ணெய்க் கம்பெனியாருக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை அக்டோபரில் கூட இருக்கும் ஈரானியப் பாராளுமன்றம் அங்கீகரிக்குமென்று நம்பப்படுகிறது.

ஈரான் சர்க்கார், எண்ணெய்க் கம்பெனி இவைகளின் பிரதிநிதிகள் அரசியல் சட்ட நுணுக்க ஆலோசகர்கள் ஒப்பந்தத்தின் ஷரத்துகளைத் தயார் செய்கின்றனர்.

புதிய ஒப்பந்தப்படி எண்ணெய்க் கிணறுகளின் நிர்வாகப் பொறுப்பை ஈரான் சர்க்காரும், எண்ணெய்க் கம்பெனிகள், தொழில் நுணுக்க பொறுப்புகளைத் தங்களிடமும் வைத்துக் கொள்வார்கள் என்று தெரிகிறது.

உற்பத்தியாகும் எண்ணெயில் ஈரானின் உள்நாட்டுத் தேவைகளுக்கு ஒரு சதவித லாபத்தில் விற்பனை செய்ய எண்ணெய்க் கம்பெனிகள் ஒத்துக் கொண்டிருக்கின்றன.

இதுவன்றி, ஐப்பானுக்கு அனுப்ப ஈரான் ஒப்புக் கொண்டபடி எண்ணெய் அனுப்ப எண்ணெயில் ஒரு குறிப்பிட்ட அளவு ஈரான் சர்க்காருக்கு ரிசர்வ் செய்யப்படுமென்று தெரிகிறது.

வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தம்!

பெய்ரூத், ஆக. 3—

லெபனானில், இன்று சட்ட வழக்கு மன்றங்கள் ஸ்தம்பித்துவிட்டன. அரசாங்கம் 'தரக் குறைவாக' தங்களை நடத்துவதாக வழக்கறிஞர்கள் குற்றம் சாட்டி, ஒருவாரத்திற்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

செல்வாசா விடுதலை அடைந்தது

பிப்பர்ட்டா, ஆக. 3—

போர்த்துகீசியத் இடங்களான அவேலியின் நிர்வாக இருப்பிடமான 'செல்வாசா,' இன்று காலை 11 மணிக்கு 'ஆசாத் கோமந்தக் தொண்டர் படை'யின் கைவசமாயிற்று எனத் தொண்டர் படைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

கழகக் கூட்டங்கள்

★

தலையாமங்கலம்

ரெயில் மில்லுக்கு எதிரில்

தி. மு. கழக துவக்கவிழா

6—8—54 மாலை 6½ மணிக்கு

தலைவர் : ப. நாராயணசாமி

பேசுபவர் : சி. பி. சிற்றரசு

★

வெள்ளப்பட்டி

6—8—54 வெள்ளி மாலை

தலைவர் : தனலட்சுமி

பேசுவோர் :

மணிஎழிலன்

த. பொன்னாசி

செய்திக்கதிர்

தகவல் இல்லை

புதுவை, காரைக்கால் பகுதிகளிலிருந்து ஆகஸ்டு 14-ந் தேதி பன்று பிரெஞ்சுக்காரர்கள் வாபஸ் பெற முடிவு செய்திருக்கிறார்கள் என்று வெளியான செய்திகள் பற்றி இந்திய சர்க்காருக்கு தகவல் இல்லையென்று தெரிகிறது.

★

போட்டி சர்க்கார்

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதிகளில் ஆசாத் காஷ்மீர் சர்க்காருக்கு எதிராக போட்டி சர்க்கார் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீநகரில் வெளியாகும் 'காஷ்மீர் போஸ்ட்' என்னும் பத்திரிகை செய்தி ஒன்றைப் பிரசுரித்துள்ளதாம்.

★

தணிக்கை

காரைக்காலில் இந்தியப் பகுதியிலிருந்து வரும் பத்திரிகைகள் சர்க்கார் நிர்வாகியினால் தணிக்கை செய்யப்பட்ட பின்னரே விற்பனை செய்ய அனுமதிக்கப்படும் என்று தெரிகிறது.

★

ராயல் டைகர்

சென்னைக்கு புதிதாய் வந்திருக்கும் 'லேலண்ட் ராயல் டைகர்' என்ற புதுவித பஸ்கள் 50-ல், சென்னை கவர்னர் முதலியோர் அமர்ந்து வெள்ளோட்டம் பார்த்தனர். இந்த பஸ்களில் மொத்தம் 70 பேர் செல்ல முடியுமாம்!

★

விலகுகிறார்கள்

காங்கிரஸிலிருந்து ராஜிநாமா செய்து விடுவதென்று தமிழரசுக் கழகத்தினர் முடிவு செய்துள்ளார்கள் என்று தெரிகிறது.

★

மறியல்

திரு—தமிழர் அறப்போரில் பல ஊர்களிலும், செவ்வாய் அன்று 24 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

★

குடியிருப்பு

இரயில்வே சிப்பந்திகளுக்கு அடுத்த ஆண்டில் 20,000 வீடுகளை கட்டிக் கொடுக்க இரயில்வே இலாகா தீர்மானித்து திட்டமிட்டிருக்கிறதாம்.

★

சட்டசபை

ஆகஸ்டு 6-ந் தேதி நடைபெற இருக்கும் சென்னை சட்டசபை கூட்டத்தில் நான்கு சர்க்கார் மசோதாக்கள் விவாதிக்கப்படுமென்று தெரிகிறது.

★

கல்வி

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் உத்திர பிரதேசத்தில் கல்விக்காக ரூ 34 கோடி செலவிடத் தீர்மானித்துள்ளார்கள் என்று தெரிகிறது.

★

தீர்ப்பு

நகல், மூலப்பிரான்கள் தயாரிக்கும் டிராப்ட்ஸ்மென் 1947-ம் ஆண்டு தொழில் தகராறு சட்டத்தின்கீழ் 'தொழிலாளி'தான் என்று சென்னையில் கூடியுள்ள தொழில் தகராறு அப்பீல் கோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது.

[illegible] குடியேற்றத் தறகம் அச்சக தொதர் [illegible] செம்மல், எம். ஏ. [illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : [illegible]